கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்
கைராசியான முன்னணி நிறுவனம்
**திருமாட்டி புடைவைக் கடல்**
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

மக்களின் நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கையர், ஆடவர் மனதைக் கொள்ளை கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு, பருத்தி புடைவைக் கடல்
**திருமாட்டி புடைவைக் கடல்**
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சுடர் 10 · திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 24 புதன்கிழமை (07 – 06 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 192



தமிழீழ மாணவர் எழுச்சி நாளையொட்டி நேற்றுப் பிற்பகலில் யாழ்ப்பாணத்தில் நடந்த பேரணியில் சென்ற ஊர்தி ஒன்றை முதலாவது படத்திலும், பேரணியில் பங்குபற்றிய மாணவர்களின் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## சமாதான முயற்சிக்கு உதவ கனடா தயார்

கொழும்பு, ஜூன் 7

''இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு உதவ கனடா எப்பொழுதுமே தயாராக உள்ளது''.

— இவ்வாறு கொழும்பிலுள்ள கனேடிய தூதரகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் கனடாவின் பங்களிப்பை விரும்பும் பட்சத்தில், உதவிக்கான நியாயமான வேண்டுகோள் எதனையும் பரிசிலனை செய்வதற்கு கனடா தயாராக உள்ளது.

பேச்சுவார்த்தைக்கு திரும்பும்படி சம்பந்தப்பட்டவர்களை வற்புறுத்தும் அதே வேளையில் சமாதான முயற்சியை தொடரும்படி ஊக்குவிப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டது.

கனேடிய வெளிவிவகார அமைச்சின் ஆசிய பசுபிக் பிரிவுச் செயலாளர் ரேமன் சான்ஸ் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்ததை அடுத்த இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ஓ-5)

## கடற்படையினர் சுழியோடி தேடுதல்

''சீ – டான்ஸர்'' கண்ணியில் சிக்கியதை அடுத்து காணாமற்போன கப்பற் சிப்பந்தியைத் தேடிக் கண்டு பிடிக்க கடற்படைச் சுழியோடிகள் தொடர்ந்து தேடுதல் நடத்தி வருவதாகவும் —

ஆனால் எதுவித பலனும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

கண்ணிவெடியில் கப்பல் மூழ்கியது குறித்து காங்கேசன்துறைக்கு விரைந்து சென்ற பாதுகாப்பு நிபுணர்கள் குழு ஒன்று, தற்போது புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஓ-14-5)

# தெற்கில் மேலும் குண்டு வெடிப்புகள் நடக்கலாம் என்று பெரும் பதற்றம்!

குண்டு வெடித்ததை அடுத்து

## கட்டுநாயக்காவில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 7

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்றுமுன் தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து விமான நிலைய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு தற்போது ஆயுதம் தாங்கிய 250 பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

''ஹைஏஸ்'' வாகனத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்ததாகக் கூறப்படுகிறது.

குண்டு முழுமையாக வெடிக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கோட்டை ரயில் நிலையம் முன் குண்டு வெடிப்பு!

கொழும்பு, ஜூன் 7

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் — மதுபான விற்பனை நிலையத்தில் — நேற்று குண்டு ஒன்று வெடித்ததால் இருவர் படுகாயம் அடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

உடனடியாக அப்பகுதிக்கு மேலதிக இராணுவத்தினர் அழைக்கப்பட்டு, தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

பொலீஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை — கட்டு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பை இறுக்கமாக்க நேரிடும் என்கிறார் பொலீஸ்மா அதிபர்

கொழும்பு, ஜூன் 7

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன் தினம் இரவு நடைபெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து—

கொழும்பிலும், தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளிலும் குண்டு வெடிப்புக்கள் —

இனி அடிக்கடி தொடர்ந்து நடைபெறக்கூடும் என்று இப் பகுதி மக்களிடையே பெரும் பதற்றம் நிலவுவதாக — ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

பாதுகாப்பு பெரிதும் பலப்படுத்தப்பட்டிருந்த விமான நிலையத்துக்கு நூறு மீற்றா தொலைவிலேயே குண்டு வெடித்த பின்னர் —

ஏனைய இடங்கள் எப்படித் தப்பமுடியும் என்று அவதானிகள் அச்சம் வெளியிட்டனர்.

கட்டுநாயக்காவுக்குக் கொழும்பில் இருந்து செல்லும் பாதையும், கொழும்பு நகரும் தீவிரமான பாதுகாப்புக்குள் உள்ளன. அப்படி இருக்க அதற்குள் வாகனம் ஒன்று குண்டுடன் சென்றது ஆழமாக யோசிக்கப்பட வேண்டிய ஒரு விடயம் என்று பொலீஸ் மா அதிபர் பிராங் டி.சில்வா நேற்றிரவு பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

குண்டுடன் வந்த வாகனம் கட்டுநாயக்காவுக்கு வடக்குப் பக்கமாக இருந்தே வந்திருக்க வேண்டும் என்றும் —

விசாரணையின் போது பாதுகாப்பில் பலவீனம் இருப்பதாகக் காணப்பட்டால் தலைநகரிலும் ஏனைய இடங்களிலும் அது மேலும் இறுக்கமாக்கப்படும் என்றும் — பொலீஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை—

கட்டுநாயக்கா விமான நிலையத்தடியில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு வெளிநாடுகளில் பலத்த விளைவுகளை ஏற்படுத்தும் என்றும்—

அது, உள்நாட்டில் உண்டாகக் கூடிய பாதிப்புகளை

(4ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ மாணவர் எழுச்சிப் பேரணியில் சென்ற ஊர்திகளில் மக்கள் மனதைக் கவர்ந்த தேசியத் தலைவரின் முழுநீள உருவப்படத்துடன் கூடிய பிரதான ஊர்தி இது. (அ-3)

மனதைக் கவரும் ஊர்திகளுடன் இடம்பெற்ற

# மாணவர் எழுச்சி நாள் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்

யாழ்ப்பாணம், ஜூன் 7

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நேற்று மிகவும் உணர்வு பூர்வமாகவும் உத்வேகத்துடனும் கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் உள்ள பாடசாலைகளையும் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மாணவ மாணவிகள் எழுச்சி நாள் சிறப்பு அம்சமான பேரணியிலும், மற்றும் பொதுக் கூட்டத்திலும் கலந்து கொண்டனர்.

பேரணியில் கலந்துகொண்ட மாணவ, மாணவிகள் தமது பாடசாலைகளுக்குரிய பல வர்ணங்களில் உடைகளை அணிந்திருந்தமை கண்ணைக் கவரும் காட்சியாக அமைந்தது.

பேரணியில் வந்த ஊர்திகள் மக்கள் மனதைக்கவருவனவாகவும், கருத்தாழம் மிக்கவையாகவும் மிளிர்ந்தன.

தேசியத் தலைவர் திரு.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர் பங்களிப்பு கிடைத்தால் போராட்டத்தில் முழு வெற்றி

### பாலகுமாரன் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 7

எங்கள் விடுதலைப் போராட்டம் முக்கிய நகர்வுகளைக் கண்டு இப்போது முதிர்ச்சி அடைந்துள்ளது. இந்த நிலையிலே, ஊர் கூடி தேர் இழுப்பது போல மாணவர்களும் தங்களது பங்களிப்பை வழங்கினால் போராட்டத்தில் முழுமையான வெற்றி காண முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன்.

தமிழீழ மாணவர் எழுச்சி நாளையொட்டி யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப் பீட மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாணவர் எழுச்சி பேரணியின் முடிவில் நடைபெற்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி உணவு விநியோகம் பாதிப்புறாது

கொழும்பு, ஜூன் 7

சீடான்ஸர் கப்பல் கண்ணிக்கு இலக்கான சம்பவம் வட பகுதிக்கான உணவு விநியோகத்தை எந்த விதத்திலும் பாதிக்காது என அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

உணவுப் பொருள்கள் தாமதமின்றி வழமை போல் அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-14)

## "சீ – டான்ஸர்" கடலில் மூழ்கி அமிழ்ந்தது!

யாழ்ப்பாணம், ஜூன் 7

கடந்த ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறையில் கடற் கண்ணியில் சிக்கிய 'சீ டான்ஸர்' கப்பல் நேற்று முன் தினம் இரவு கடலில் முற்றாக மூழ்கிவிட்டதாக நேற்று யாழ்ப்பாணத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்தோனேஷியாவில் உள்ள ஒரு தனியார் கம்பனிக்குச் சொந்தமான இக்கப்பலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வாடகைக்கு கடந்த பெப்ரவரி மாதம் அமர்த்தி, பயணிகள் சேவையை நடத்தி வந்தது.

கண்ணியில் சிக்கிய இக்கப்பல் சேதமடைந்ததால், கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கிக்கொண்டிருந்தது தெரிந்ததே. [ஓ-3]

## தப்பிய 11 பேரும் இன்று கொழும்பு செல்கின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 7

''சீ-டான்ஸர்'' கண்ணியில் சிக்கிய சமயம் அதில் பயணம் செய்து உயிர் தப்பிய 11 பேரும் இன்று கொழும்பு செல்லவுள்ளனர்.

தற்சமயம் காங்கேசன்துறையில் தரித்துள்ள 'லங்கா கல்யாணி' கப்பல் மூலம் இவர்கள் திருகோணமலைக்கு சென்று அங்கிருந்து கொழும்பு செல்லவுள்ளனர்.

கப்பல் மாலுமிகள் ஒன்பது

[ 4ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தெற்கும் இனவன்செயலும்

திம்புலாகல சொலன்னாரை தேரர் கொலையுண்டதைத் தொடர்ந்து, அதனைச் சாட்டாக வைத்துத் தெற்கில் தமிழர்களுக்கு எதிரான இன வன்செயலைத் தூண்டும் முயற்சிகள் [illegible] கடந்த வெள்ளி, [illegible] நடைபெற்ற சம்பவங்கள்.

தமிழருக்கு எதிரான வன்செயல்களைத் தூண்டுவதில் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியே பின்னுக்கு நிற்பதாக அரசாங்கக் கட்சி பிரசாரம் செய்து வருகிறது. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா அதனை மறுத்துள்ளார்.

தமது ஆட்சி நிர்வாகத்தில் ஒரு 'கறுப்பு ஜூலை' நிகழ்ந்து விடக்கூடாது என்பதில் ஜனாதிபதி சந்திரிகா அக்கறையாக இருக்கக் கூடும். அப்படி ஒன்று நடைபெற்று விட்டால் நேரத்துக்குப் பொருத்தமான பொய்யைக் கூறி வெளி உலகத்தின் ஆதரவைப் பெற முடியாது என்பதே அந்த அக்கறையின் அடிப்படை!

தமிழ் மக்கள் மீது உள்ள அன்பினால் அல்லது அக்கறையினால் அவர் இனவன்செயலை வெறுக்கிறார் என்று சொல்வதற்கில்லை. தமிழ் மக்கள் மீது அக்கறை இருந்தால், சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறிப் பதவிக்கு வந்துவிட்டுத் தமிழருக்கு எதிரான போரைத் தொடங்கியிருக்க மாட்டார். பொருளாதாரத் தடையைத் திணித்துத் தமிழ் மக்களைப் பட்டினி போட்டு சாகடிக்க முனையமாட்டார்.

உண்மையில் தமிழர்களுக்கு எதிரான போரை நடத்துவதற்கு வெளிநாடுகளின் பலவகை உதவிகளும் சந்திரிகாவுக்குத் தேவைப்படுகின்றன. அந்த உதவிகளில் இராணுவ உதவியும் அடங்குகின்றது.

தாம் நடத்தும் போர் தமிழர்களுக்கு எதிரானது அல்ல, விடுதலைப் புலிகளுக்கே எதிரானது என்ற தோற்றத்தைக் காட்டியே அவர் வெளிநாட்டு உதவிகளைப் பெற முயல்கிறார். அந்தப் பொய்யை நம்பி சில வெளிநாடுகள் அவருக்கு உதவுவதற்கும் முன்வந்துள்ளன.

இந்த நிலையில் தெற்கில் தமிழருக்கு எதிரான வன்செயலை அனுமதித்தால் தமிழருக்கு எதிரான போருக்கு வெளிநாட்டு உதவி கிடைக்காமல் போகக்கூடும்! அதனாலேயே இனவன்செயலை ஐக்கிய தேசியக் கட்சியே தூண்டி வருகிறது என்று கூறி, அதனைத் தனக்கு ஒரு கேடயமாக்குவதற்கு சந்திரிகா முயல்கிறார்!

சந்திரிகா பதவிக்கு வரும் போது தெற்கில் தமிழருக்கு எதிரான இனத்துவேஷம் சற்றுத் தணிந்து போயிருந்தது. உண்மையில் அது உள்ளுறைந்து இருந்தது. தமிழர் பிரச்சினையை நியாயமான முறையில் தீர்க்க வேண்டும் என்று மனப்பூர்வமாகவே சந்திரிகா விரும்பியிருந்தால் தாம் ஜனாதிபதியாக வந்த ஆறு மாத காலத்திற்குள் அதனைச் செய்திருக்கலாம்.

கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிட்டு விட்டு, காலத்தை விணடித்துவிட்டு, சமாதான வழியைக் கைவிட்டுப் போர் வழிக்கு வந்த பின்னர், சிங்கள மக்களின் இனத்துவேசத்தை ஒளித்து வைத்திருக்க — அடக்க — முயல்வது பயன்தரப்போவதில்லை.

அரசாங்கக்கட்சி எம். பிக்களே தமது வாக்காளர்களுக்குக் கொடுத்த சமாதான வாக்குறுதியை மறந்து தமிழருக்கு எதிராகப் போராடத் தயாராகும் போது — சிங்கள வாக்காளர்கள் — மக்கள் — இனத்துவேசத்தை எவ்வாறு அடக்கி வைத்திருப்பார்கள்?

காஞ்சூரம் மரத்தை நட்டுவிட்டு பலாக்கனி கொய்ய முடியுமா?

தெற்கில் இன வன்செயல் எவரது தூண்டுதலின் பேரில் வெடித்தாலும் அதற்கு சந்திரிகாவே பொறுப்பு. அதிலிருந்து அவர் தப்பமுடியாது.

மேலும் 1958ஆம் ஆண்டில் அவரது தந்தையாரின் ஆட்சிக் காலத்திலும் தெற்கில் காலி, மாத்தறை மாவட்டங்களிலேயே இன வன்செயல்கள் முதலில் பெருமளவில் வெடித்தன என்பது குறிப்பிடத்தக்கது!

# அரச அதிபர்கள் பொறுப்பில் வரும் உணவு லொறிகளுக்கும் தடை!

## வன்னியில் உணவுத் தட்டுப்பாடு மோசமாகும்!

ஓமந்தை, ஜூன் 7 [illegible] முல்லைத்தீவு மன்னார் மாவட்டங்களில் பெரும் உணவுத் தட்டுப்பாடு உண்டாகும் அபாயம் உருவாகி உள்ளது. இந்த மூன்று மாவட்டங்களுக்கும் தேவையான உணவுப் பொருள்களை அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களின் பொறுப்பில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் இதுவரை எடுத்து வரப்பட்டன. [illegible] அரச அதிபர்களின் பொறுப்பில் வரும் பலநோ. கூ. சங்கங்களுக்கான லொறிகளை (G.A.S' Convoys) அனுமதிக்கப் போவதில்லை என்று இராணுவம் [illegible] தெரிவித்தனர். [illegible] ஒரு மாதத்துக்கு முன்னரே இராணுவத்தினர் தடுத்துவிட்டனர். [illegible] (அ-9)

## செயலகத்தில் மீண்டும் கல்யாண மண்டபம்!

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ் செயலகத்தில் 10 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் கல்யாண மண்டபம் இயங்க ஆரம்பித்துள்ளது.

யாழ். செயலக பதிவாளர் பிரிவில் கல்யாணப்பதிவுகளை மேற்கொள்ளவரும் மணமக்களின் நலனைக்கருத் திற்கொண்டு இந்த கல்யாண மண்டபம் செயற்பட ஆரம்பித்துள்ளது.

கல்யாணப் பதிவுகள் முடிவடைந்து படம் எடுக்க மாலை மாற்ற இம்மண்டபத்தில் சுமார் 15 பேர் வரை கூடியிருக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

காரியாலய பதிவாளர் திரு. க. சுந்தையா இந்தப் பிரிவுக்கு பொறுப்பாகஇருப்பார். (ஓ-3)

## காலி அசம்பாவித எதிரொலி:

# 3 பொலீஸ் அதிகாரிகள் விரைவில் இடமாற்றம்

கொழும்பு, ஜூன் 7

காலி கடை எரிப்புச் சம்பவத்தின் எதிரொலியாக அப்பிரதேசத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகள் மூவர் விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக தெரியவந்தது.

இவர்கள் மூவரும் தமிழர்களின் கடைகள் எரித்து நாசமாக்கப்பட்ட சம்பவத்திற்கு துணை நின்றவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடை எரிப்புச் சம்பவம் பற்றி ஏற்கனவே தெரிந்திருந்தும், அதனை தடுக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ எதுவித நடவடிக்கையையும் இவர்கள் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகள் வந்ததாகக் கூறி அநுராதபுரத்தில் பதற்றம்!

கொழும்பு, ஜூன். 7

புலிகள் வந்து விட்டனர் எனப் பரவிய வதந்தியினால் அநுராதபுரம் நகரில் பெரும் பீதியும் களேபரமும் ஏற்பட்டன.

நகர மக்கள் இதனால் சிறிது நேரம் அல்லோல கல்லோலப்பட்டனர்.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

விடுதலைப் புலிகளின் திடீர்த்தாக்குதல்களின் போது எவ்வாறுதற்காத்து செயற்படுவது என்பதுகுறித்து அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அண்மையில் டாக்டர்களுக்கும், ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

அபாய நிலைமையை 'சைரன்' ஒலி மூலம் அறிவித்து அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

ஆஸ்பத்திரியில் நடந்த இந்தப் பயிற்சி ஒத்திகை உண்மையிலேயே ''புலிகள் வந்துவிட்டனர்'' என்ற வதந்தியாக நகரில் பரவியது.

அவ்வளவுதான் மக்கள் கிலி கொண்டு ஓடத் தொடங்கினர். கடைகள் இழுத்து மூடப்பட்டன.

உண்மை தெரியவரும் வரை இந்நிலை நீடித்தது. (ஐ)

# ஜனாதிபதி மாவத்தையில் நின்ற மூன்று தமிழர் கைது!

கொழும்பு, ஜூன் 7

கொழும்பு ஜனாதிபதி மாவத்தையில் காரணம் எதுவுமின்றி நின்றுகொண்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட மூவரை பொலீஸார் கைது செய்தனர்.

சபாரத்தினம் பாலசிங்கம், பொன்னுத்துரை சந்திரகுமார் மற்றும் சுண்டிக்குளியைச் சேர்ந்த சகுந்தலா முத்துராஜா ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டு கொழும்பு கோட்டை பதில் நீதிவான் திருமதி மல்காந்தி விக்கிரமநாயக்க முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சபாரத்தினம் பாலசிங்கத்தை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் மற்றைய இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்தார். (உ-3)

# மீனவரின் நிவாரண விவகாரம் அமைச்சரவைக்கு

வடக்கு - கிழக்கு கடலில் மீன்பிடிக்க விதிக்கப்பட்ட தடையால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கும் விவகாரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட இருக்கிறது.

கொழும்பில் கடந்த புதன்கிழமை நடந்த அத்தியாவசிய சேவைகள் கூட்டத்தில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

கடல் தடையால் மீனவ குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர் நோக்கியுள்ளதாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கே மேற்கண்ட பதில் அளிக்கப்பட்டது [ஐ-3]

# கடந்த மாதத்தில் மட்டும் 221 படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 7

கடந்த மே மாதத்தில் நாளொன்றுக்கு 7 என்ற வீதத்தில் ஸ்ரீலங்கா படையினர் விடுதலைப்புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். என ''புலிகளின் குரல்'' தெரிவித்தது.

கடந்த மாதம் முதலாம் திகதி முதல் 31ஆம் திகதி இரவு வரை நடத்தப்பட்ட தாக்குதல்களில் மொத்தம் 221 படையினர் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்டவர்களில் லெப்டினன்ட் கேணல் தர அதிகாரி ஒருவரும் அடங்குவார்.

அதிக எண்ணிக்கையான படையினர் தாளவக்குளம் முகாம் தாக்குதலில் கொல்லப்பட்டனர் எனத் [illegible]ப்பட்டது. (ஓ-3)

## தலைநகரினுள் ஊடுருவியுள்ள

# தற்கொலையாளியை பிடிக்க முயற்சியாம்

கொழும்பு, ஜூன் 7

கொழும்பினுள் ஊடுருவியுள்ள விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒருவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய புலனாய்வு பணியகம் தெரிவித்துள்ளது.

முன்னணி அரசியல் வாதிகள் மற்றும் முக்கியஸ்தர்களை கொலை செய்யும் நோக்கில் இவர் கொழும்பு வந்துள்ளார் என்று புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-14)

# பழுதடைந்த மீன்ரின்கள் பறிமுதல் செய்து அழிப்பு

தென்மராட்சிப் பகுதியில் உள்ள உணவு விற்பனை நிலையம் ஒன்றில் இருந்து காலாவதியாகும் திகதிக்கு முன்னரே பழுதடைந்திருந்த மீன் ரின்கள் தமிழீழ சுகாதாரப் பகுதியினரால் கண்டு பிடிக்கப்பட்டன.

''ஏஞ்ஜல்'' ரக 16 பெரிய மீன் ரின்களே இவ்வாறு கைப் பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

— இது தொடர்பாக தமிழீழ சுகாதா சேவைகள் பொறுப்பாளர் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

எமது பகுதியில் உள்ள மீன்பிடித்தடை, மாற்றமடைந்து வரும் வாழ்க்கை முறை என்பவற்றால் இன்று பலரும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்கள், ஏனைய உணவுப் பொருள்களைக் கணிசமான அளவில் உணவுத் தேவைக்காக பயன்படுத்துகிறார்கள்.

இத்தகைய தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகள் சில சமயங்களில் காற்றின்றி வாழ் கிருமிகளின் தாக்கத்திற்குள்ளாவதுண்டு இக் கிருமிகள் மிகக் கொடிய நச்சுப் பதார்த்தங்களைச் சுரக்கின்றன இவை நரம்புத் தொகுதியின் தொழிற்பாட்டைப் பாதிப்பதனால் மரணத்தை ஏற்படுத்தவல்லன.

இத்தகைய கிருமிகள் பெருகும்பொழுது, வெளிவிடப்படும் வாயுக்களினால் ரின்களின் மேற்புறமும், கீழ்ப் புறமும் ஊதியிருக்கும்.

எனவே, இவற்றினால் ஏற்படும் அனாவசிய உயிரிழப்புக்களைத் தடுக்குமுகமாக ஊதியிருக்கின்ற, துருப்பிடித்திருக்கின்ற அல்லது நீக்கல் ஏற்பட்டிருக்கின்ற, தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்களை எவரும் கொள்வனவு செய்ய வேண்டாமெனவும், இவை பற்றி உடனடியாக தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினருக்கு அறிவிக்கும்படியும், பொது மக்களைக் கேட்டுக் கொள்கிறோம். [ஐ]

## புலிகளின் குரல் வானொலியில்

**புதன் இரவு**
07 — 06 — 1995

★ 8-02—மாணவர் எழுச்சி நாளை யொட்டி நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பு.
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — நாடகம் — கப்டன் துவசிராம் எழுதிய ''தமிழின் அவலம்''

08 — 06 — 1995
**வியாழன் காலை**

★ 7-02 —மாவீரவணக்கம்
★ 7-15 — விடுதலை கீதங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — விடுதலை கீதங்கள் — நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

**புதன் மாலை**

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 புதியவை
★ 5-15 — படப்பாடல்
★ 5-30 — அறிவூற்று
★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
★ 6-02—உங்கள் தெரிவு
★ [illegible] செய்திகள்
★ [illegible] தெரிவு

# கூண்டினுள் இருக்கும் கோழி போன்று படையினர் முகாமினுள் முடக்கம்

## தியாகி சிவகுமாரன் நினைவு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 7

"இலங்கை இராணுவம் இப்பொழுது கூட்டுக்குள் இருக்கும் கோழி போன்று முகாம்களில் அடைபட்டுக் கிடக்கிறது"

தியாகிசிவகுமாரன் நினைவு நாள் நிகழ்ச்சியில் பேசும் போது திரு வின்சன்ட் இவ்வாறு கூறினார்.

உரும்பிராயில் உள்ள திரு. சிவகுமாரன் நினைவுப்பூங்காவில் வலிகாமம் பொறுப்பாளர் திரு. கு. திருக்குமரன் தலைமையில் ஜூன் 5 ஆம் திகதி மேற்படி விழா நடைபெற்றது.

திரு. வின்சன்ட் மேலும் பேசும்போது கூறியதாவது.

இந்நிலையில் நாம் எமது நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும்.பாரிய அழிவுகள் ஏற்பட்டாலும் கூட நாம் முந்திக் கொண்டு செயற்படவேண்டும். மக்கள் எல்லோரும் இணைந்தால் வெற்றி நிச்சயம். அவர்கள் எம்மை அழிப்பதற்குமுன் நாம் அவர்களை அழித்துவிடலாம்.

எமது மக்கள் மீது பொருளாதாரத் தடைகளை இறுக்கமாக்கிய இராணுவத்தினருக்கு நாம் இன்று பொருளாதாரத் தடைகளை உண்டு பண்ணியுள்ளோம். குடாநாட்டில் முப்பதாயிரம் படையினர் உள்ளனர். கடல் பரப்பில் 60 சதவீதம் எமது கடற்புலிகளின் கையில் உள்ளது. நாற்பது வீதமான கடல் பரப்பு பொருள்களை எடுத்துவரும் கப்பல் பாதையாக விடப்பட்டுள்ளது.

இப்போது கிழக்கில் இடம்பெற்றுவரும் பாரிய தாக்குதல் நடவடிக்கைகளின் காரணமாக அந்தப் பகுதியின் கட்டுப்பாடும் எமது கையில் முழுமையாகக் கிடைக்கவுள்ளது.

ஸ்ரீலங்கா படைகள் போர் முனையில் ஒரு புதிய உத்தியைக் கையாளுகிறார்கள். தாக்குதல் நடைபெறும் போது எப்படியாவது தப்பிப் பிழைத்தால் போதும் என்று ஓடி விடுகிறார்கள். பின்னர் புலிகளிடமிருந்து முகாமை மீட்டெடுத்து விட்டதாக பிரசாரம் செய்கிறார்கள். விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை வெற்றிகரமாக முறியடித்து விட்டதாக பிரசாரம் செய்கிறார்கள்.

தங்களது பாதுகாப்புக் காரணம் காட்டி பூநகரி பாதையை எமது மக்களின் போக்குவரத்திற்குத் திறந்துவிட சந்திரிகா மறுத்தார். இப்போது ஒரு பாதையைத் திறந்துவிட எங்களைக் கேட்க வேண்டிய நிலையில் அவர் இருக்கிறார். தரை, கடல், வான்வழி அனைத்துமே எமது கட்டுப்பாட்டில் இருக்கின்றன. ஒரு பாதைக்காக எங்கள் தலைவரின் அனுமதி பெற வேண்டிய நிலையில் அவர் உள்ளார்.

### மேலும் பல விமானங்கள் வீழும்

நாங்கள்சமீபத்தில் இரண்டு விமானங்களை வீழ்த்தியுள்ளோம். மேலும் பல விமானங்கள் விழும். எமது விடுதலைக்கும், சுதந்திரத்திற்குத் தம்மை அர்ப்பணித்த மாவீரர்கள்பலர் சிவகுமாரன் விடுதலைப் போருக்கு முன்னோடியாக விளங்கியவர். இவர்களது அடிச் சுவட்டில் எமது போராட்டம் வெல்லும் தேசம் விடியும். இவ்வாறு அவர்பேசும்போது கூறினார்.

வலிகாமம் பொறுப்பாளர் திரு. திருக்குமரன் தமது தலைமையுரையில் கூறியதாவது;

இன்று எமது போராட்டம் உலகம் வியக்கும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது. எமக்கென ஒருநாடு வேண்டும் என்பதற்காக சிவகுமாரன் தன்னைத் தியாகம் செய்தார். இந்த விடுதலைப் போரின் முன்னோடியான அவரை இந்தமண் ஒருபோதும் மறக்காது— என்றார்.

பேராசிரியர் அ சண்முகதாஸ் பேசும் போது கூறியதாவது;

வீரம் குறித்தும் வீரர்களைப் பண்டைய மக்கள் எவ்வாறு தொழுதனர் என்பது குறித்தும் புற நானூற்றுப் பாடல்கள் எமக்குத் தெளிவுபடுத்துகின்றன. அந்த வகையில் இன்று எமது பிள்ளைகள் எமது மண்ணின் விடுதலைக்கு தம்மை அர்ப்பணிக்கின்றார்கள். இத்தகைய பிள்ளைகளின் வீரவரலாற்றைக் காணும்போது இந்தக் காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்று பெருமைப்படுகிறோம். விடுதலைப் போருக்கு முதல் அடியெடுத்த சிவகுமாரனுக்கு நாம் நன்றியுடையவர்களாக இருப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி தமிழ்க்கவி பேசும் போது கூறியதாவது:

வியக்கத்தக்க எமது போராட்ட வரலாற்றில் தமது பிள்ளைகளைச் சான்றோர் எனக் கேட்டதாய் மார்கள்இன்று நிறையவுண்டு. இதற்கு வழி காட்டியாக அமைந்தவர் சிவகுமாரன்.

இங்கே பதினாறு வயதுப் பெண்கள் துவக்கேந்துகிறார்கள். கடற்புலியாக, கரும்புலியாக மாறுகிறார்கள், இருபத்தி ஐந்து வயது வாலிபர்கள் என்ன செய்கிறார்கள்? கைகோர்த்தபடி தெருவில் போகிறார்கள் மற்றவர்களுக்கு இடையூறு செய்தபடி.

இந்த மண் விடுதலைக்காக உயிர் தந்த சிவகுமாரனின் வழியில் விரைந்து விடுதலை காண பெற்றோர்களே தங்கள் பிள்ளைகளைப் போருக்கு அனுப்பும் உறுதி கொண்டவர்களாக விளங்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். தியாகமும் பேசினார்.

முன்னதாக சிவகுமாரனின் உருவச் சிலைக்கு அவரது தாயார் திருமதி அன்னலட்சுமி மலர்மாலை அணிவிக்க மாவீரர் பணிமனை பொறுப்பாளர் பொன் தியாகம் ஈகைச்சுடர் ஏற்றித் தேசியக் கொடி ஏற்றினார்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [க-111]

# புத்தளத்தில் பொலிஸார் அடிக்கடி தேடுதல் வேட்டை

கொழும்பு, ஜூன் 7

புத்தளம், [illegible] பிரதேசம் கடந்த வெள்ளி முதல் மறுநாள் சனிக்கிழமை வரை பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டு, தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதுபோன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்பட்டது.

வீடு வீடாகச் சென்று மக்களை தட்டி எழுப்பி பொலிஸார் சோதனையிட்டனர்.

இச் சம்பவத்தில் தமிழ் இளைஞர்கள் பலர் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறான தேடுதல்கள் இனி மேலும், இப்பகுதியில் தொடர்ந்து நடத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். [ஐ-5]

# பிரதேச செயலகப் பிரிவுகளில் சமாதானக் குழுக்கள்

## அமைக்க ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜூன் 7

நாடு முழுவதும், பிரதேச செயலக மட்டத்தில் சமாதானக் குழுக்களை அமைக்குமாறு ஜனாதிபதி பிரதேச செயலர்களை பணித்துள்ளார்.

நாடு பயங்கர யுத்தத்துக்கு முகம் கொடுத்து வரும் இவ் வேளையில் இனக்கலவரம் ஒன்று ஏற்படுவதை தவிர்க்கும் வகையில், சமாதானக் குழுக்களை அமைத்து அமைதி பேண நடவடிக்கை எடுக்குமாறு அவர்கேட்டுள்ளதாக ஜனாதிபதியின்தொடர் புத்துறை செயலாளர் தெரிவித்தார். [ஐ-14]

## காணாமல் போனோர் விசாரணை

# உதவி வழங்க வருகிறார் ஆர்ஜென்டீனா பேராசிரியர்

கொழும்பு, ஜூன் 7

காணாமல்போனவர்கள் குறித்து விசாரணை நடத்துவது தொடர்பான முறைகளை இலங்கை அதிகாரிகளுடன் பகிர்ந்து கொள்வதற்காக ஆர்ஜென்டீனா நாட்டு சட்டத்துறை பேராசிரியர் ஒருவர் இலங்கை வரவுள்ளார்.

இவர் எதிர்வரும் 12ஆம் திகதி இங்கு வருவார் என தெரிவிக்கப்பட்டது.

காணாமல் போனவர்கள் பற்றி விசாரணை நடத்தி வரும் இலங்கை அதிகாரிகளுடன் இவர் பேச்சுக்களை நடத்துவார்.

உலகிலேயே அதிகக்கூடிய அளவிலான மக்கள் காணாமல்போன நாடு ஆர்ஜன்டீனாவே என்பது குறிப்பிடத்தக்கது.

அரச முக்கியஸ்தர்கள், ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர்கள், அங்கத்தவர்கள் மற்றும் நீதித்துறைச் சார்ந்த அதிகாரிகளையும் இவர் சந்தித்து உரையாடவுள்ளார். (ஐ-5)

## சேவை நலம் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 7

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபராகக் கடமை யாற்றி இன்று முதல் இளைப்பாறும் பிரபல எழுத்தாளரும் நாடக நடிகக்கலைஞருமான சைவப்புலவருமான திரு. நா. க. தங்கரத்தினம் (நகுலன்) அவர்களின் சேவை நலம் பாராட்டு விழா இன்று மேற்படி பாடசாலையில் இடம்பெறும்.

இவ்விழாவுக்கு ஆசிரியமணி கா. சின்னத்துரை தலைமை வகிப்பார். (ஐ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

திருத்தி அமைக்கப்பட்ட பெல்லி சுப்பர் மோட்டார் சைக்கிள் நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. P. S. சுப்பிரமணியம், "உமையாள்" பணிக்கர் வளவு, திருநெல்வேலி. (36949)

### வாடகைக்கு அறைதேவை

1ஆம் வருட பல்கலைக்கழக மாணவன் ஒருவருக்கு பல்கலைக்கழக சுற்றாடலில் 2 மைலுக்குள் வாடகைக்கு அறை தேவை. தொடர்பு: சி. பரணிஸ்வரன் 9, கலட்டி அம்மன் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [36953]

### SPECIAL ANTENNA

To view Rupavahini, Madras, Programmes Fixing Special T. V. Antenna, Repairing Antennas, Radios, T. V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road (Ariyakulam Junction), Jaffna. Branch: Kandy Road, Chavakachcheri. (C-1490)

### A/L மாணவர்களுக்கு

வர்த்தகமும் நிதியும் 1990—1994 வரை 1992—1991 விசேட பேப்பர் கடந்தகால வினாக்களும் விடைகளும் பொருளியல் 1990—1994 வரை 1990—1991 விசேட பேப்பர் கடந்தகால வினாக்களும் விடைகளும் ஆக்கம் E. செல்வநாயகம் (Royal College) விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக சாலை யாழ்ப்பாணம். சி 1437

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் ஆரம்ப அறிவிலிருந்து தேவைப்படும் அறிவு வரைக்கும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும். சி. ஜெயராஜா, 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [8571]

### மனோரமா இயர் புக்

1995 ஆம் ஆண்டிற்கான மனோரமா இயர் புக் வெளிவந்து விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. தமிழ் கம்பியூட்டர் "மே" மாத இதழ் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. இவ்விரண்டையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள பூபாலசிங்கம், புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-1438]

---

உ

வெல்லில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானம்

சங்கானை

## 07 - 06 - 1995

# 7ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

அன்பார்ந்த முருகன் அடியார்களே!

எமது ஆலய 7ஆம் நாள் மஹோற்சவமான

## கப்பல் திருவிழா

உற்சவம் இன்று புதன்கிழமை (07-06-1995) நடைபெற உள்ளது. அன்றைய தினம் எம்பெருமானுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட கப்பலில் எம்பெருமான் வீதிவலம் வரும் நிகழ்வு இடம்பெறும்

## அன்றைய நிகழ்ச்சிகள்

**விசேட மேளக் கச்சேரிகள்:**

காலை 9-30தொடக்கம் நண்பகல் 1மணி வரை இடம்பெறும்

★ ஈழத்தின் தலைசிறந்த நாதஸ்வர வித்துவான்கள்

N. K. பத்மநாதன் குழுவினர்
V. K. கானமூர்த்தி ,,
V. K. பஞ்சமூர்த்தி ,,
N. R K இரட்ணமூர்த்தி ,,
N. R. K. வாகீஸ்வரன் ,,

★ ஈழத்தின் தலைசிறந்த தவில்மேதைகள்

N R. புண்ணியமூர்த்தி
N. R. S ரவி குழுவினர்
N. R. S. சுதாகர் ,,
கோண்டாவில் பாலன் ,,
சுதுமலை கண்ணன் ,,

ஈழத்தின் தலைசிறந்த ஒப்புற்ற மேதைகள் நாதஸ்வர, கான மழைபொழிய எம்பெருமான் அலங்கரிக்கப்பட்ட கப்பலில் நண்பகல் 12 மணிக்கு எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிப்பார். 1 மணிக்கு பகல் திருவிழா நிறைவடையும்.

அதனைத் தொடர்ந்து அடியார்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படும்.

அடியார்களின் வசதியைக் கருத்தில் கொண்டு வழிபடுவோர் சபைக் கட்டடத்தில் அன்னதானம் வழங்கப்படும் என்பதை அடியார்கள் அனைவர்க்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

இவ் மஹோற்சவத்தை பொறுப்பேற்று இறைபணியில் 5) வருடங்கள் நிறைவுற்றமையை நினைவு கூர்ந்து இவ் அன்னதானம் அடியார்கள் அனைவருக்கும் வழங்கப்படுகின்றது.

## மாலை நிகழ்ச்சிகள்

மாலை உற்சவம் வழமையான நேரத்திற்கு ஆரம்பமாகி வெளிவீதி உலா நிகழ்ச்சிகள் இடம்பெறும். அதைத் தொடர்ந்து மாலை 8மணிக்கு

**ஈழத்தின் இசைக்குயில் பார்வதி சிவபாதம், சாந்தன் குழுவினர் இணைந்து வழங்கும் பக்திப் பாடல்கள் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.**

அனைவரையும் வருகைதந்து எம்பெருமான் அருள்பெற்று ஏகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
7ஆம் திருவிழா உபயகாரர்
பொ. நாராயணலிங்கம்
(குடும்பத்தினர்)

(36964)

---

உ
கணபதி துணை

# விவாஹ சுப முகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ வருடம் வைகாசி மாதம் 25ஆம் நாள் (08 - 06 - 1995) வியாழக்கிழமை காலை 7-28 மணி முதல் 9-04 மணி வரையுள்ள அத்த நக்ஷத்திரமும், சித்த யோகமும், மிதுன லக்கினமும் கூடிய சுபயோக சுப முகூர்த்தத்தில்,

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ அ. கந்தசாமி ஐயர் தம்பதிகளின் புத்திரன் சிரஞ்சீவி **யசோதரசர்மாவுக்கு** (கைலாசநாத சுவாமி கோயிற் குருக்கள், கப்பித்தாவத்தை, கொழும்பு - 10) | சிவஸ்ரீ பா அருணாசலக்குருக்கள் தம்பதிகளின் புத்திரி சௌபாக்கியவதி **மாலினியை** |

கன்னிகாதான, திருமாங்கல்யதாரண பாணிக்கிரகண விவாஹஞ் செய்ய ஸ்ரீ கருணாகடாக்ஷ அம்பாள் சமேத கைலாசநாத சுவாமியின் திருவருளால் நிச்சயிக்கப்பட்டு சுப முகூர்த்தம் மணமகளில்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்ட மித்திர பந்து ஜனங்களுடன் சமூகமளித்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்: 08 — 06 — 1995 வியாழக்கிழமை காலை 4-30 மணி மணமகனில்லம்

வரவேற்பு உபசாரம்: 08 — 06 — 1995 வியாழக்கிழமை மாலை 4-00 மணி மணமகளில்லம் ("அன்னை வில்லா" K. K. S. வீதி, சுன்னாகம்)

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

பிரம்மஸ்ரீ அ. கந்தசாமி ஐயர் தம்பதிகள்,
சிவஸ்ரீ ச. குறிஞ்சிவேந்தக் குருக்கள் (மலேசியா),
விணியவரை அம்மன் கோயில், மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

பிரம்மஸ்ரீ சி. சோதிரத்தினசர்மா தம்பதிகள்,
"கணேச பவனம்" பிள்ளையார் கோயில், வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

(இரு வீட்டார் அழைப்பு)

[36960]

---

யாழ். மறைக்கோட்ட கத்தோலிக்க மாணவருக்கான

## விசேட ஞாயிறு திருப்பலி

ரியூசனுக்கு செல்வதன் காரணமாக ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் பங்குபற்ற முடியாத மாணவர்களுக்காக ஜூன் மாதத்திலிருந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 6-15 மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஞாயிறு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். ஞாயிற்றுக்கிழமைகளில் தங்களது ஆலயங்களில் திருப்பலியில் பங்கெடுக்க வசதியில்லாத மாணவர்களை இத்திருப்பலியில் பங்கெடுக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

யாழ். மறைக்கோட்ட பங்குத் தந்தையர்கள்.

[8574]

---

சைவசித்தாந்த

## ஆய்வு வட்டம்

"உள்பொருள்" பற்றிய தொடர் உரைகள்

1995, ஜூன் மாதம்
7 - 14 - 21 - 28 ஆம் திகதிகள்

1995 ஜூலை மாதம்
5, 12 -ஆம் திகதிகள்
மாலை 4–30 மணி

திருமறைக் கலாமன்ற கேட்போர் கூடம்

பொறுப்பாளர்.
சைவசித்தாந்த ஆய்வு வட்டம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1452)

---

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 20-02-1957 உதிர்வு: 19-05-1994

திருமதி
## நவமலர் கந்தசாமி (மலர்)

திதி: 07–06-1995

வழி சொன்ன தெய்வம் தான் நீங்கள் - போன
வழி சொல்ல வில்லை
வழி பார்த்து ஏங்கும் நீங்கள் - போன
வழி பார்த்து நாளும்
அழியாத உங்கள் நினைவோ
ஒழியாது நமை விட்டு
வழி யேதும் உண்டோ உமை
வர வழைக்க இப் புவியில்
ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.

இன்று 07-06-1995 புதன் நண்பகல் 12மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் திதியிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.


— குடும்பத்தினர்

"மலர் பவனம்"
காளி கோவிலடி,
சங்கானை.

(36962)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## இளையதம்பி மாயவன்

மலர்வு: 24 — 06 — 1967 உதிர்வு: 08 — 05 — 1995

மானிட வாழ்வில் அரும்பாகி, மொட்டாகி, மலராகி மணம் பரப்பும் வேளையில் காலனவன் பறித்துச் சென்றுவிட்டான். விதியின் எழுத்து என்றாலும் விம்மியழுகிறதே எம் நெஞ்சம் உருவில் தான் நீ இல்லை. என்றுமே நினைவாய் இருப்பாய் நீ எம் நெஞ்சில்.

— குடும்பத்தினர்

இணுவில்.

(36950)

---

# யாழ். தபாலகங்களில் சிற்றூழியர் பதவி வெற்றிடம்

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ். மாவட்டத்திலுள்ள 12 தபாலகங்களிலும், 7 உப தபாலகங்களிலும், சிற்றூழியர்களுக்கான பதிவு செய்யப்பட்ட பதிலாட்கள் பதவி வெற்றிடமாக உள்ளது.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், அந்தந்த பகுதி தபால் அலுவலக அதிபர்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்று இம்மாதம் 16ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை பதிவு அஞ்சல் மூலம், யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகருக்கு அனுப்பி வைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

அளவெட்டி, அச்சுவேலி சங்கானை, சாவகச்சேரி சுன்னாகம், கைதடி, உ. வெட்டி, மானிப்பாய், உரும்பிராய், வல்வெட்டித்துறை, வசாவிளான், யாழ்ப்பாணம் ஆகிய அஞ்சல் அலுவலகங்களிலும்— புத்தூர், மிசாலை, மல்லாகம், ஏழாலை, குடத்தனை, புலோலி, தொண்டமனாறு ஆகிய உப அஞ்சல் அலுவலகங்களிலுமே மேற்படி வெற்றிடங்கள் நிரப்பப்படஉள்ளன. (ஐ-5)

---

அம்பிகை துணை

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

## வருடாந்த மகோற்சவம் - 1995

மேற்படி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் வைகாசி மீ 26ஆம் நாள் 09-06-1995 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி மீ 03ஆம் நாள் 17-06-1995 சனிக்கிழமை வேள்வியுடன் நிறைவுறும்.

கொடியேற்றம் காலை 10 மணிக்கு நடைபெறும். தினமும் பகல் திருவிழா காலை 8 30 மணிக்கு ஆரம்பமாகி பகல் ஒரு மணி வரையும், இரவு திருவிழா பிற்பகல் 3-30 மணி முதல் பிற்பகல் 6-30 மணி வரையும் நடைபெறும். பொங்கல் 16-06-1995 வெள்ளி இரவு ஆரம்பமாகி நடைபெறும் என்பதனை அடியார்களுக்கு அறியத் தருகிறோம்.

— தேவஸ்தான பரிபாலன சபை

[8431]

---

நாரந்தனை - சரவணை கர்ணந்தோட்டம்

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

## விசேட அபிஷேகமும் பூசையும்

9 - 6 - 95 வெள்ளிக்கிழமை

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ காலத்தை முன்னிட்டு எதிர்வரும் 9 - 6 - 95 வெள்ளிக்கிழமை காலை 9–00 மணிக்கு யாழ். வண்ணார்பண்ணை அருள்மிகு கதிர் வேலாயுதசுவமி ஆலயத்தில் (வண்ணை சிவன் கோயில் அருகில்) விசேட அபிஷேகமும் பூசைகளும் நடைபெற திருவருள் கூடி இருப்பதனால் அன்றைய தினம் முருகன் அடியார்கள் அனைவரும் வருகைதந்து விழாவில் கலந்து முருகப்பெருமானின் இஷ்டசித்திகளை பெற்று ஏகுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஆலய பரிபாலன சபையினர்

(36969)

---

# முக்கிய அறிவித்தல்

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையினால் 14 - 04 - 1995 அன்று நடத்தப்படவிருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு 12 - 06 - 1995 திங்கட்கிழமை பி. ப. 4-00 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடத்தப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

கா. சந்திரராசா,
தலைவர், கலாசாரப் பேரவை,
வலிகாமம் மேற்கு.

(36965)

---

# மேசைப் பந்தாட்டப் போட்டி

யாழ். றோட்டறிக்கழக ஆதரவில் யாழ். பல்கலைக்கழக விளையாட்டவையினால் நடத்தப்படுகின்ற மேசைப்பந்தாட்டப் போட்டி ஜூலை 30 ஆம், ஜூன் 1 ஆம், 2 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

விண்ணப்ப முடிவுத்திகதி:- **20 06 1995**

விண்ணப்பப்படிவம் கிடைக்கு மிடம்:-
பல்கலைக்கழக
விளையாட்டுத்துறை அலுவலகம்

பணிப்பாளர்,
உடற்கல்வித்துறை,
யாழ் பல்கலைக்கழகம். [36966]

---

யாழ். பல்கலைக்கழக
சமூக விஞ்ஞான மன்றத்தினர்
தயாரித்து வழங்கும்
— சி. ஜெயசங்கரின் —

# தீ சுமந்தோர்

[நாடகம்]

8 ஆவது தடவையாக

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில்

காலம்:- இன்று 7.6.1995 புதன்கிழமை
நேரம்:- பிற்பகல் 3 மணி

நுழைவுச்சீட்டுக்கள் மண்டப வாயிலில்

அன்பளிப்பு 10/-, 20/-

சமூக விஞ்ஞான மன்றம் [S.S.U.]

யாழ். பல்கலைக்கழகம்.

[36970]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கப்பல்களுக்கு பாதுகாப்பு; முடிவு சில தினங்களில் தெரியவரும்

## ஜெனிவா சென்ற அதிகாரி இன்று திரும்புகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 7
வடக்குக்கு வரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் நடவடிக்கையை மறுபரிசீலனை செய்வது தொடர்பாக பேச்சுக்கள் நடத்த ஜெனிவா சென்றிருந்த இக்குழுவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி இன்று கொழும்பு திரும்ப இருக்கிறார் என்றும் —

அவர் கொழும்பு திரும்பியதும், இந்த விவகாரத்துக்கு இன்னும் சில தினங்களில் தெளிவான முடிவு தெரியவரும் என்றும் அறிய வந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறையில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் சென்ற சீ-டான்ஸர் கப்பல் கண்ணியில் சிக்கியதை அடுத்து —

வடக்குக்கு வரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்ய செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு முடிவு செய்துள்ளது தெரிந்ததே.

கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் விடயத்தில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கும் வகையிலான உடன்பாடு ஒன்றை காண்பதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு பேச்சுக்களை நடத்தியது.

இருதரப்பின் கருத்துக்களையும் பெற்றுக்கொண்டு ஜெனிவா தலைமையகத்துக்குச் சென்றுள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொழும்பில் உள்ள இலங்கை வதிவிடப் பிரதிநிதி அங்குள்ள அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதாகவும் —

அவர் இன்று கொழும்பு திரும்புவார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இருதரப்புக்கும் இடையில் உடன்பாடு காண்பதில் தடைகள் ஏதும் ஏற்படும் பட்சத்தில், யாழ்ப்பாணத்தில் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு என எதிர்பார்க்கப் படுகிறது. (ஓ-3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி குணபாக்கியம் குமாரசாமி

சங்கானை தேவாலய வீதியைச் சேர்ந்த குணபாக்கியம் குமாரசாமி நேற்று (6-6-95) சிவபதமடைந்தார்.

இவர் சங்கானை கோகுலன் மருந்தகம் உரிமையாளர் நல்லதம்பி குமாரசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா — அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், ராசரத்தினம் — சற்குணத்தின் அன்புச் சகோதரியும், சிவசாந்தி, ஜெயக்குமார் (பிரான்ஸ்), சாந்தகுமார் (பிரான்ஸ்), சந்திரகுமார் [பிரான்ஸ்), சிவகௌரி (பிரான்ஸ்), சிவசிறீ, ராம்குமார் [கோகுலன் மருந்தகம், சங்கானை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவஞானசுந்தரம் (தபால் அலுவலகம், கிளிநொச்சி,] ஜெயந்தி (பிரான்ஸ்], ஜெனனி [பிரான்ஸ்], தயாறூபி (பிரான்ஸ்), சதாநீதன் (பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமியாரும், ராஜ்கண்ணா, ராஜ்கோபன், ராஜ்கோகுலன், சாகித்தியா, லெற்றீஸியா, சஸாங்கன், ஜெருசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், புஸ்பநாதன் [S.R.P. ஸ்ரோர்ஸ், சங்கானை], திருமதி குணாதீதன் புனிதகுமாரி ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று தேவாலய வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1 மணியளவில் தகனக்கிரியைக்காகப் பூதவுடல் கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
ந. குமாரசாமி
(கணவர்)
கோகுலன் மருந்தகம்
சங்கானை.

R. புஸ்பநாதன்,
S R P. ஸ்ரோர்ஸ்,
சங்கானை.
[36973]

### சின்னப்பு நாயகம் – ஜோசவ் நவக்குமார் (குமார்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னப்பு நாயகம் ஜோசவ் நவக்குமார் கொழும்பில் 4-6-95 இல் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு நாயகம் – லீலிமலர் (ஓய்வுபெற்ற தாதி) தம்பதிகளின் அன்பு மகனும், வில்லியம் [கிளிநொச்சி இ. போ. ச.], Dr. செல்வரட்ணம் [கொழும்பு பெரியாஸ்பத்திரி), அரியநாயகம் [லண்டன்], காலஞ்சென்ற தவமலர், அற்புதமலர் [கிளிநொச்சி] ஆகியோரின் அன்புச் சகோதரரும், சின்னமலர் [மல்லாவி), ஜோசவ்வா [திருக்குடும்ப கன்னியர் மடம், இந்தியா], பசுபதி [கிளிநொச்சி] ஆகியோரின் பெறாமகனும் அல்பிறட், அரியமலர் அவர்களின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (8-6-95] இல. 150, ஜம்பட்டா வீதி, கொழும்பு 13 இல் நடைபெறும்.

தகவல்:
பூ. சுமதி

(36972)

### திருமதி ஜேட்றூட்டம்மா (பரிமளம்) மரியநாயகம்

திருமதி ஜேட்றூட்டம்மா [பரிமளம்) மரியநாயகம் 5-6-95 இல் காலமானார்.

இவர் S. M. மரியநாயகம் (ஆசிரியர் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், மி. எலியாஸ் (சிவப்பிரகாசம்), காலஞ்சென்ற திருமதி மேரி யோசேப்பின் (பாக்கியம்) ஆகியோரின் அன்பு மகளும், திருமதி றொஷீற்றா வினிடா றெமிஜியஸ், செல்வன் ஷிராஜ்ஜீன், செல்விகள் ஜஸ்ஸின் றோஷான் (Dr. A L. ஏபிரகாம் வைத்தியசாலை), கிறஷன்சியா றோஜினி(A/Lமாணவி திருக்குடும்பகன்னியர் மடம்), றொமியூவா ஷெறீன் (திருக்குடும்ப கன்னியர் மடம்), செல்வன் ஜெனத் ஜிவ்றியன் (புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாள்ஸ் றெமிஜியஸின் (சாந்தி ஹொலண்ட்) அன்பு மாமியாரும், திருமதி றீசா இரத்தினம், திருமதி மகேஸ் துரைராசா ஆகியோரின் சகோதரியும், மோ. தார்சிசியஸ் (இளைப்பாறிய ஆசிரியர் ஸ்கந்தவரோதயா கல்லூரி), திருமதி. ம. அ. மயில்வாகனம் (ஆசிரியர் சென். றொக்ஸ் வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனியும், திருமதி யோசவ் சாள்ஸின் சம்பந்தியுமாவார்.

நல்லடக்கம் இன்று (7-6-95) பிற்பகல் 3-00 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மோ. தார்சிசியஸ்

18/10, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். (36971)

### மாணவர் பங்களிப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்கூட்டத்திற்கு தமிழீழ மாணவர் அமைப்பு [பொறுப்பாளர் திரு. இன்பன் தலைமை வகித்தார்.

மாணவர்களின் எண்ணங்கள் எல்லாம் ஒரு புதிய பாங்கிலே மாற்றமடைந்து நாளைக்கு பெறப்போகின்ற விடுதலையைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் பாடுபட வேண்டும்.

விடுதலையை வெல்லக் கூடிய இறுதி வரலாற்று வாய்ப்பு இப்போது வந்திருக்கின்ற சமயத்திலேயே இந்த கடமையை நீங்கள் செய்ய வேண்டும் என்பதற்காகவுமே மாணவர் எழுச்சி விழா கொண்டாடப்படுகின்றது.

உங்களுக்கு முன்னர் இருந்த மாணவர் சமூகத்தினர் என்ன செய்தார்கள் அந்த இள வயதிலேயே — 12, 13, 14 வயதுகளிலேயே — கட்டைக் கால் சட்டை அணிந்த பருவத்திலேயே — வீட்டை விட்டு வெளியே வந்து சிங்கள அடக்கு முறைக்கு எதிராக போராட வேண்டுமென்ற அந்த ஒரே ஒரு எண்ணத்திலே எத்தனையோ துன்பங்கள் துயரங்களைத் தாங்கி இன்றைக்கு உங்கள் முன்பு ஒரு பாரிய விடுதலை இயக்கத்தை கட்டி வளர்த்து அதனைப் பற்றி இப்போது உங்களுக்குச் சொல்லுகிறார்கள்.

இங்கே நடக்கப்போகின்ற வரலாற்று நிகழ்வுகளிலே நீங்களும் பங்கேற்க வேண்டும். உங்கள் பங்கு அங்கே கட்டாயம் பதியப்படவேண்டும். அன்று தான் வரலாறு தனது பூரண கடமைகளைச் செய்ததாக முடியும்.

விடுதலைப் போராட்டம் வெற்றியடைந்த பின்னரும், எங்கள் சமூகம் பழைய நிலைக்குப் போகாமல், விட்ட இடத்திலே இருந்து முன்னேறிச் செல்ல மாணவர் சமூகத்தின் உழைப்புத் தேவை.

ஆகவே எல்லாவற்றையும் இணைத்துப் பார்க்கும்போது இந்த மாணவர் எழுச்சி நாள் என்பது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருப்பத்தின் நிகழ்வாக ஒரு பிரதிபிம்பமாக இங்கே அரங்கேறுகிறது. — என்று கூறினார்.

முன்னதாக தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த திரு. தங்கன் ஏற்றிவைத்தார். மங்கள விளக்கை கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளையவன், செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனியும்ஏற்றிவைத்தனர்.

செஞ்சோலை மாணவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பா, மாணவர் எழுச்சி கீதம் ஆகியவற்றுடன் ஆரம்பமான இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட மகளிர் மாணவரமைப்பு பொறுப்பாளர் செல்வி திலகா வரவேற்புரை நிகழ்த்தினார்.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட்திரு பிரான்சிஸ்யோசப் அடிகளார் ஆகியோரும் மாணவர்கள் சார்பில் உடுத்துறை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் சுபாகரன், பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த செல்வன். தவச்செல்வன், யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் செல்வன். பிறேமகாந்தன், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் செல்வன் ச. தெனிஸ், யாழ். கல்வி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு. சிவானந்தன், வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு. ... சாமி ஆகியோரும் ... றினர்.

### தெற்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட பாரதூரமானதாக அமையும் என்றும் ஏ. எவ். பி. செய்தியாளர் அமல் ஜெயசிங்கா தெரிவித்தார்.

குண்டு வெடிப்பு பலத்த சேதங்களை உண்டாக்காவிடினும், அதனை நடத்தியவர்களின் நோக்கம் (வெளிநாடுகளை அச்சுறுத்துவது) நிறைவேறி விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இக் குண்டு வெடிப்பு பாதுகாப்புப் படையினருக்கு மட்டுமன்றி விமான நிலைய அதிகாரத்தினருக்கும் பெருங்கிலேசத்தையும், வெட்கத்தையும் ஏற்படுத்தி இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இன்னும் சில நாள்களுக்குத் தெற்கில் குண்டு வெடிப்புகள் அடிக்கடி நிகழும் என்று எதிர்பார்க்கலாம் என்றும் —

கடந்த வருடத்திலும் உல்லாசப் பயணத்துறையைப் பாதிப்புறச்செய்யும் விதத்தில் கொழும்பு ஹோட்டல்களில் அடுத்தடுத்து குண்டு வெடிப்புகள் நிகழ்ந்ததாகவும் — அவதானிகள் சுட்டிக்காட்டினர். (அ-3)

### கோட்டை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாயக்கா குண்டு வெடிப்புச் சம்பவம் மற்றும் கோட்டைப் பகுதியில் நேற்று நடந்த குண்டுவெடிப்புச் சம்பவம் ஆகியவற்றைத்தொடர்ந்து--

தமிழர்கள் பலர் கைதாகியுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பின் பலபகுதிகளிலும், நீர்கொழும்பு, கந்தான, வத்தளை போன்ற பகுதிகளிலும் இடம்பெற்ற சுற்றிவளைப்புகளில் தமிழர்கள் பலர் கைதாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3]

### மாணவர் எழுச்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி[

வே. பிரபாகரனின் முழு நீளப் படத்துடன் கப்பல் வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்த ஊர்தி மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

தமிழீழ இராச்சியத்தின் நடுவே தேசியத் தலைவரின் படம் அமைந்திருந்தது.

இந்த ஊர்தியில் தமிழீழத்தின் விமானம், கடற்படைக் கப்பல், விமானத்தைத் தாக்கும் ஏவுகணைகள் சித்திரிக்கப்பட்டிருந்தன.

தமிழீழத்தில் எதிர்காலத்தில் அமையவுள்ள தொழிற்சாலைகள், கல்விக் கூடங்கள் தொழில் வளங்கள், மக்களின் எழுச்சி நிலை என்பனவும் அந்தப் பிரதான ஊர்திக்கு எழில் சேர்த்தன.

பேரணியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

மாணவர்களின் இந்த எழுச்சிப் பேரணி நேற்று பிற்பகல் சுமார் 1. 30 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரியில் இருந்து ஆரம்பமானது.

கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதியூடாக பேரணி யாழ். பல்கலைக்கழக மைதானத்தை பிற்பகல் சுமார் 3. 30 மணிக்குச் சென்றடைந்தது.

**கடக்க ஒன்றரை மணிநேரம்**

பேரணி குறுப்பிட்ட ஓர் இடத்தைக் கடந்து செல்வதற்கு சுமார் ஒன்றரை மணிநேரம் பிடித்தது.

பேரணியில் முதலில் பல்வேறு பாடசாலைகளின் மாணவ மாணவிகள் 'பாண்ட்' இசையுடன் அணிவகுத்துச் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து மாணவர்கள் அரசுக்கு எதிரான மற்றும் விடுதலை எழுச்சி வாசகங்கள் கொண்ட சுலோக அட்டைகளையும் —

தமிழீழ மாணவர் கொடியையும் தாங்கிச் சென்றனர். மாணவர்கள் தமிழீழ மாணவர் எழுச்சி நாள் பட்டிகளையும் அணிந்திருந்தனர்.

பல பாடசாலை மாணவர்கள் கரகம், காவடி, கோலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளையும் பேரணியில் நடத்திக் கொண்டு சென்றனர்.

போராட்ட வரலாற்றையும், மாணவர்கள் மீது ஸ்ரீலங்கா அரசு கட்டவிழ்த்து விட்டுள்ள அட்டூழியங்களையும் சித்திரிக்கும் வகையில் பத்துக்கும் மேற்பட்ட ஊர்திகள் பேரணியில் சென்றன.

**ஆப்பிழுத்த அன்ரி**

ஜனாதிபதி சந்திரிகாவை சித்திரிக்கும் வகையில் 'ஆப்பிழுத்த அன்ரி, என்ற வாசகத்துடன் அமைக்கப்பட்ட ஊர்தியும் மக்களைக் கவர்ந்தது.

மற்றொரு ஊர்தியில் ஸ்ரீலங்கா கூட்டுப்படை ஒருபுறமும், தமிழீழ விடுதலைப் புலிகள் மறுபுறமும் கயிறிழுத்தல் போட்டி ஒன்றை நடத்துவது போலவும், அதில் இன்னும் "ஓர் அடி', என்று விடுதலைப் புலிகள் பக்கம் எழுதியும் காணப்பட்டது இது தமிழீழ வெற்றி மிக அண்மையில் தான் உள்ளது என்பதை மக்கள் மனதில் தோற்றுவிக்கும் வகையில் இருந்தது.

பேரணியில் முடிவில் பல்கலைக்கழக மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. [அ-3-15]

> கொஞ்சம் ஏமாந்தால்
> கொளுத்தத் தீ கொடுப்பவன் உளவாளி.
> அறிந்தவர் என்றாலும்
> [illegible]!

### சாவகச்சேரியில் தீ சுமந்தோர் நாடகம் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ். பல்கலைக்கழக சமூகவிஞ்ஞான மன்றத்தினரின் தீ- சுமந்தோர் நாடகம் இன்று பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் மேடையேறவுள்ளது.

சமூகவிஞ்ஞான மன்றத்தினர் தயாரித்து வழங்கும் இந் நாடகம் எட்டாவது தடவையாக மேடையேறுகிறது [ஓ]

### தப்பிய ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேரும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரியும், அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரியும் காங்கேசன்துறையில் தங்கி உள்ளதாகவும் —

அவர்கள் இன்று கொழும்பு செல்லவுள்ளதாகவும் — தெரிவிக்கப் பட்டது.

இதே வேளை — கொழும்பு திரும்பும் கப்பலின் மாலுமிகள் ஒன்பதுபேரும்இந்தோனேசியாவுக்கு திரும்ப விருக்கின்றனர். [ஓ-3]

### கட்டுநாயக்கா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காததால் விமான நிலையம் பாரிய அழிவிலிருந்து தப்பிக் கொண்டதாக பொலீஸார் கூறுகின்றனர்.

இந்தச் சம்பவம் பற்றி பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவத்தின்போது சுமார் 80 கிலோகிராம் பிளாஸ்ரிக் வெடிமருந்துகள் வைக்கப்பட்டிருந்த 'ஹைஏஸ்'' வாகனம் மாத்திரமே சேதம் அடைந்தது. உயிர் இழப்புகள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வாகனத்தை முழுமையாகப் பரிசோதனை செய்வதற்காக இரசாயன பகுப்பாய்வாளரின் உதவியைத் தாம் பெற்றுக்கொள்ள இருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

குண்டு சரியான முறையில் வெடித்திருந்தால் பெருமளவு உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கும்; என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மீறி நடைபெற்ற இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து தீவிர விசாரணைகளை நடத்துமாறு பொலீஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்பு நடந்த சமயம் இந்த வாகனத்திலிருந்து இரண்டு பேர் ஓடியதைத் தாம் கண்டதாக சாட்சிகள் தெரிவித்திருக்கிறார்கள் என்று கூறப்பட்டது. (ஓ-க-3-14-6]




பேரணியில் சென்ற மற்றொரு ஊர்தி. ஜனாதிபதி சந்திரிகாவின் இப்போதைய நிலையைச் சித்திரிக்கிறது இது. (அ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

''உதயன்'' கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் பருத்தித்துறை திக்கமுனையில் உள்ள கழக மைதானத்தில் நடக்கும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3. 45 மணி — அளவெட்டி இளைஞர் வி.க அணி எதிர் அல்வாய் நண்பர்கள் "ஏ" அணி

★ 4.45 மணி — பருத்தித்துறை ஐ. வி. க அணி எதிர் நாவற்குழி லயனிதா வி.க அணி. (ஓ-3)

★ ★ ★

வண. சகோதரர் ஹில்லறி ஜோசப் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் "லாசாலா" சகோதரர்கள் சபை நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் இடம் பெறவுள்ளன. பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி :- உதயன் வி.க அணி எதிர் யாழ். பல்கலைக்கழக "ஏ" அணி

★ 4.30 மணி :- பற்றிசியன் அணி எதிர் தியாகிகள் குருத்துவக்கல்லூரி அணி.

★ ★ ★

சாவகச்சேரி மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின்47 ஆவது ஆண்டுநிறைவை யொட்டி நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் கால் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் அணிகள் வருமாறு

★ சுழிபுரம் சத்தியா வி.க எதிர் ஆவரங்கால் எவறஸ்ட் வி.க.

★ இளவாலை யங்கென்றியன் வி. க. எதிர் சாவகச்சேரி ஸ்ரீதாஸ் வி.க.

### மெய்வல்லுநர் போட்டி

யாழ். கல்வித்திணைக்களம் வலயம் I பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. நா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தனும் விசேட விருந்தினராக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பொறுப்பாளர் செல்வி ம. வாசுகியும் கலந்துகொள்வர். திருமதி இ. சிவானந்தன் பரிசில்கள் வழங்குவார்.

உ

உரும்பிராய்
பர்வதவர்த்தினி அம்மன் கோயில்

## கைலாசவாகனத்திருவிழா

07-06-95 புதன்கிழமை பகல் விசேட அபிஷேகம் பூசைகளும், இரவு விசேட மேளக்கச்சேரிகளும், இன்னிசைவிருந்தும், இரவு 9 மணிக்கு அம்பாள் புதிய கைலாசவாகனத்தில் திருவீதி எழுந்தருளுவார். அம்பிகை அடியார்கள் அனைவரும், அம்பாளின் அருட் காட்சியைக் காணுமாறு வேண்டுகிறோம்.

**நிகழ்ச்சிகள்**

கண்ணபிரான் குழுவினர்:

நாதஸ்வரமேதை
" N. K. பத்மநாதன் குழுவினர்
" V. K. கானமூர்த்தி, V. K. பஞ்சமூர்த்தி குழுவினர்
" N. R. K. இரத்தினகுமார், N R. K, வாகீஸ்வரன் கோவிந்தசாமி புதல்வர்கள்
" R. கேதீஸ்வரன் குழுவினர்
" K. உதயநாதன் குழுவினர்
" V. K. தம்பிராசா குழுவினர்
" S. நடராசா குழுவினர்
" E. S. கண்ணன் குழுவினர்
" K. கணேசன் குழுவினர்
" K. R. சுந்தரமூர்த்தி குழுவினர்
" S. S. சிதம்பரநாதன் குழுவினர்
" K. சிவதாஸ் குழுவினர்

விசேட தவில்
" K. R. புண்ணியமூர்த்தி
" T. உதயசங்கர் (தெட்சணாமூர்த்தியின் புதல்வர்) குழுவினர்
" K. நித்தியானந்தன்
" K. சிவகுமார்

**இன்னிசை கானம்**

**இராஜன் குழுவினர்**

இங்ஙனம்
5 ஆம் திருவிழா உபயகாரர்
உரும்பிராய் வடக்கு மக்கள்

[36968]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07-06-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org